கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13.02.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் நறுமணப் பயிர்கள் வாரியம் இணைந்து நடத்தும் "நறுமணப் பொருட்களுக்கான வாங்குவோர்-விற்போர் சந்திப்பு"**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் மற்றும் நறுமணப் பயிர்கள் வாரியம் , கொச்சின் இணைந்து நடத்தும் நறுமணப் பொருட்களுக்கான வாங்குவோர்-விற்போர் சந்திப்பு 15.02.2024 அன்று காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது . இந்த நிகழ்வில், விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர் . விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர்கள் நிறு வனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் லாபத்தை அதிகப்படுத்துவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும் . இவை மட்டுமல்லாமல், சந்தை சங்கிலியை பலப்படுத்தி நுகர்வோரின் விலையில் , உற்பத்தியாளரின் பங்கை அதிகப்படுத்துவதாகும்.

இந்த சந்திப்பின் போது மஞ்சள் , மிளகு, ஏலக்காய், மிளகாய், பூண்டு மற்றும் ஜாதிக்காய் போன்ற நறுமண பொருட்களை சந்தை படுத்திக் கொள்ளலாம் . இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை . நறுமண பொருட்கள் சார்ந்த விவசாயிகள் , உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மற்றும் ஏற்றுமதியாளர்கள் உட்பட சுமார் 300 பங்கேற்பாளர்கள் நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது . ஆதலால், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் உழவர்கள் , தங்களுடைய நறுமண பொருட்களை சந்தை படுத்திக் கொள்ளலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**